

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட மதுரை தகவல் தொழில்நுட்பப் பூங்காவை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டு அங்கு எல்காட் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன் தலைவர் கலைஞர் அவர்களின் புகழ்குறித்து ஐ.டி. நிறுவன ஊழியர்களுடன் கலந்துரையாடி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்

## திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோவிலுக்கு

# புதிதாக வெள்ளி தேர் செய்யும் பணிக்காக 200 கிலோ வெள்ளிக் கட்டிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் வழங்கப்பட்டது!

நெல்லை ஜூன்.5–

திருநெல்வேலி நெல்லையப்பர்– திருக்கோவி லுக்கு புதிதாக வெள்ளி தேர் செய்யும் பணிக்காக 200 கிலோ வெள்ளி கட்டிகள்!

சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோரிடம் நெல்லை மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார், இந்து சமய அறநிலை துறை ஆணையர் ஸ்ரீதர்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ.நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் உபயதாரர்கள் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்கள் கே.எம். சுப்பிரமணியன்,க.தனசேகர்,ஜி.ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் வழங்கினார்கள்.

அருள்மிகு நெல்லையப்பர் – காந்தியம்மன் கோவில் திருக்கோவில் வெள்ளித்தேர் கடந்த 1990 ஆம் ஆண்டு வரை பிரதி ஆண்டும் வைகாசி மாதத்தில் பூரம்,உத்திரம்,அஸ்தம் ஆகிய நட்சத்திர தினங்களில் சிவலிங்க பூஜை செய்து பஞ்ச மூர்த்திகளை வெள்ளி ரதத்தில் வைத்து திருவீதி உலா நடைபெற்று வந்தது.ஆனால் கடந்த 24–05–1991 ஆம் ஆண்டு திருக்கோவில் வெள்ளித்தேர் இருந்த அறையில் ஏற்பட்ட தீ விபத்தி னால் வெள்ளித்தேர் முழுமையாக எரிந்துவிட்டது.அதன் பின்னர் மேற்படி விசேஷ தினங்களில் பஞ்சமூர்த்திகளை சிவலிங்க பூஜை முடித்த பின்னர் செப்பு ரகத்தில் வைத்து திருவீதி விழா நடத்தி வரப்படுகிறது.எரிந்து போன வெள்ளி தேருக்கு பதிலாக புதிதாக வெள்ளித் தேர்வு செய்வதற்கு தமிழ்நாடு சட்டப்பேரவை 2023–2024 ஆம் ஆண்டுக் கான இந்து சமய அறநிலைத்துறை மானிய கோரிக்கையின் போது நெல்லையப்பர் திருக்கோவிலுக்கு புதிதாக வெள்ளித்தேர் செய்யப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி தேர் செய்வதற்கு முதற்கட்டமாக உபயதாரர் மூலம் ரூ.14.85 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் செய்து முடிக்கப்பட்டது.அதன் பின்னர் மரத்தேரில் வெள்ளி பொறுத்துவதற்கு உபயதார் மூலம் வெள்ளி பெற்று அதனை உருக்கி தகடுகளாக மாற்றி,புதிய மரத்தேரில் வெள்ளி தகடுகளில் நவாஸ் வேலைப்பாடுகளை செய்யும் பணிக்கு ரூபாய் 3,32,19,636.40 மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதனை பொதுமக்கள் நிதி மூலம் செய்வதற்கு அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மேற்படி வெள்ளித்தேர் முழுவதும் செய்து முடிப்பதற்கு சுமார் 425 கிலோ வரை தேவைப்படும் நிலையில் இது நாள் வரை 150 கிலோ 412 கிராம் 775 மில்லி கிராம் வெள்ளி மட்டுமே வரப் பெற்றுள்ளது. இன்று பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் அறங்காவலர்கள் சுப்பிரமணியன், தனசேகர், பாலசுப்பிரமணியம் ஆகியோர் 200 கிலோ வெள்ளி கட்டிகளை நன்கொடையாக வழங்கி உள்ளனர்.

மேலும் வெள்ளித்தேர் திருப்பணிகென வங்கிக் கணக்கில் 30–05–2025 ஆம் தேதி வரை ரூபாய் 26,57,635 இருப்பில் உள்ளது. மேற்படி வெள்ளித்தேர் பணியினை முழுமையாக கூடுதலாக தேவைப் படும் 75 கிலோ வெள்ளி உபயதார் மூலம் பெற்று புதிதாக வெள்ளித் தேர்வு செய்யும் பணியானது,அக்டோபர் 2025 ம் மாதத்திற்குள் முடித்து திருக்கோவில் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோவிலுக்கு ரூபாய் 59 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஸ்ரீ சண்டிகேஸ்வரர் திருத்தேர் செய்யும் பணி துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. சுவாமிதேர், விநாயகர்,சுப்பிரமணியர் தேர் மற்றும் சண்டிகேஸ்வரர் தேர்க்கு புதிதாக மரக்குதிரை, மரபிரம்மா, அம்பாள் தேர்க்கு மரத்தினால் பிரம்மா மற்றும் மர யாழியும் ரூபாய் 43 லட்சம் மதிப்பீட்டில் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

ஆனிப்பெருந்திருவிழாவினை முன்னிட்டு ரூபாய் 6.50 லட்சம் மதிப்பீட்டில் சுவாமி மற்றும் அம்பாள் தேர்க்கு புதிதாக 6 வடக்கயிர்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதையும்,அம்மன் சன்னதி வளாகத்தில் இரண்டாம் பிரகாரம் கல் மண்டபம் புதுப்பிக்கும் பணிகள் ரூபாய் 99 லட்சம் மதிப்பீட்டிலும்,அம்மன் சன்னதி மேற்கூரையில் புதிதாக தட்டோடு பதிக்கும் பணிகள் ரூபாய் 143 லட்சம் மதிப்பீட்டிலும்,அம்மன் சன்னதி வளாகத்தில் அமைந்துள்ள கருஉருமாறி தீர்த்தக்குளம் புதுப்பித்து கட்டும் பணி ரூபாய் 160.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருவதை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்ததாவது.

திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து மக்களும் அனைத்து வழிபாட்டு தலங்களிலும் சுதந்திரமாக வழிபாடு நடத்தும் வகையில் நவீன கடவுளாக தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். கோவில் குடமுழுக்கு திருத்தேர் திருப்பணி, திருத்தேர் பாதுகாப்பு மையம், கோவில்குளம் பராமரிப்பு,தங்கும் விடுதி உள்ளிட்ட அனைத்து பணிகளையும் எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் சாதனை படைத்த ஆன்மீக ஆட்சி தமிழகத்தில் நடந்து வருகிறது.கடந்த ஆண்டு நெல்லையப்பர் கோவில் ஆனித் திருவிழா நடந்த போது சிறிய, சிறிய பிரச்சனைகள் நடந்ததை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.அதனை சரி செய்து ஆனித் தேரோட்டத்தின் போது 5 தேர்களும், தேர்வடங்களும், தேரின் பொம்மைகளும் ஒட்டுமொத்தமாக மாற்றி, மாற்றத்திற்கான அரசு என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு கோடியே 20 லட்சம் மதிப்பில் புனரமைப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளது. யாராலும் செய்ய முடியாத அளவில் பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தப்பட்டது. கோவில்களுக்கு கடந்த 10 ஆண்டுகளில் 275 கோடி மட்டுமே நன்கொடையாக கிடைக்கப் பெற்றது. தி.மு.க ஆட்சி அமைந்த பின்னர் திருக்கோவில்களில் திருப்பணி செய்வதற்காக 1230 கோடி ரூபாய் நன்கொடையாக கிடைக்கப் பெற்றது.கடந்த ஆட்சியில் நன்கொடைகள் பெறப்பட்டாலும் அவர்களுக்கு கிடைக்க கூடியதை எடுத்து விட்டு தான் பணிகள் நடந்தது.திராவிட மாடல் ஆட்சியில் உபயதாரர்கள் கொடுக்கும் நிதி மொத்தமாக கோவில் திருப்பணி களுக்கு செலவு செய்யப் படுகிறது என்பதை உறுதி செய்ததால் மட்டுமே 1230 கோடி ரூபாயை நன்கொடை யாக பக்தர்கள் வாரி வழங்கி உள்ளனர்.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை சொல்லிக்கொண்டே போனால் நேரமும், காலமும் பத்தாது.இந்த ஆட்சி ஐந்து ஆண்டுகள் மட்டுமல்ல 50 ஆண்டுகளை கடந்தும் நடத்துவதற்கு இறைவன் துணை நிற்பார்.என்பதில் எந்த ஐயமும் இல்லை. திருக்கோவில்கள் வளம் பெறும் நலம் பெறும் பக்தர்களிடையே உள்ள தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.

முருகன் மீது அன்பும் பக்தியும் கொண்ட உண்மையான முருக பக்தர்கள் மாநாடு நடத்தினால் கண்டிப்பாக செல்வேன், மக்களை இனத்தால் மதத்தால் பிளவுபடுத்த வேண்டும் என சங்கிகளால் நடத்தப்படும் மாநாடு மதுரையில் நடக்கிறது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் கும்பாபிஷேக விழா ஜூலை 7–தேதி 400 கோடி செலவில் 7 நாட்கள் விழாக்கோலத்துடன் நடைபெற உள்ளது.உண்மையான முருக பக்தர்கள் அங்கு தான் செல்வார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி செந்தில்,இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் கவிதா பிரியதர்ஷினி, துணை ஆணையர் ஜான்சி ராணி,உதவி ஆணையர் சுப்பு லட்சுமி,மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் வெயிலியப்பன், அறங்காவலர் குழு தலைவர் செல்லையா அறங்காவலர் செல்வராஜ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவிலில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் சுப்பையா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,பரமகுரு, மரு.ராணி ஸ்ரீ குமார், செண்பக விநாயகம், புனிதா, பிரகாஷ், நாகூர் ஹனி, லாலா சங்கர பாண்டியன்,பெரியதுரை, மு.சந்திரன்,உதயகுமார், அப்பாஸ் அலி,வெள்ளத்துரை, முனியசாமி,ராயல் கார்த்தி மற்றும் வாழைக்காய் துரைபாண்டியன் உள்பட நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மாநகராட்சி மீனாட்சிபுரம் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் திராவிட மாடல் அரசு மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா சீருடை,பாடப் புத்தகம் வழங்கும் நிகழ்வு பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 29 வது வார்டு மீனாட்சிபுரம் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டபொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ பங்கேற்று பள்ளி மாணவிகளுக்கு விலையில்லா சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை வழங்கி சிறப்பித்தார்.உடன் துணை மேயர் ராஜ்,நெல்லை மேற்கு மாநகரச் செயலாளர் தினேஷ்,மாமன்ற உறுப்பினர் சுதா மூர்த்தி மற்றும் ஆசிரியர்கள்,கழகத்தினர் உள்ளனர்.

# தமிழோடு உன் புகழ் இருக்கும்!



ஏழு சுரங்கள்
அதிசயிக்கும்
இசைக்குரலே!

குறள் ஓவியம் எழுதிய
தொல்காப்பியப் பூங்கா விரலே!

கல்லறைக்குள்
தமிழ் கேட்கிறது
அலைகள்
சொல்கிறது!

உன் நினைவிடம்
நிலா அழகை
வெல்கிறது!

கலைஞர் சிலைகள்
பேருந்து நிலையம்
கலைஞர் நூலகம்
எங்கும் உன்
புகழ் மாட்சிகள்!

அனைத்துச் சாதியினரும்
அர்ச்சகர் முதல்
மாநில சுயாட்சி
தீர்ப்பு வரை
தலைவர்
மு.க.ஸ்டாலின்
வெற்றிக் காட்சிகள்!

மறக்க முடியுமா
கடிகார முள்ளாய்
தமிழரைச் சுற்றி வந்த உன்னை!

ஆணாகப் பிறந்ததால்
தாய்ப் பால் தரமுடியாது - ஆனால்
உன் மகன்தான்
எங்கள் அன்னை!

பெரியார் கைத்தடி
அறிஞர் அண்ணாவின்
எழுதுகோல்
இரண்டுமே
உன் செங்கோல்!

மண்ணிற்கு கீழே
வானத்திற்கு மேலே
உன் ஆற்றலின்
அளவுகோல்!

தொண்டர்விபத்தில் இறந்தால்
குடும்பத்திற்கு
பத்து இலட்சம்
தலைவர்
மு.க.ஸ்டாலின்
அறிவித்தார்!

தொண்டர்கள்
குடும்பத்தை
உன் மகன் போல
கலைஞர் அய்யா யார்
சிந்தித்தார்!
கலைஞரே

பசிக்கும்
எறும்புகளுக்கு
நீ-கரும்புக் காடு!

பகைக்கும்
நரிகளுக்கு
நீ -நெருப்பு வீடு!

நடிகர்களை
நட்சத்திரங்களாக
உயர்த்தியது-உன்
நாடக மேடை!

அடிமை முறையை நொறுக்கிய
தமிழரை
உயர்த்தியது
உன் பேச்சு மேடை!

தலையெழுத்து
என்றவர்களின்
உயிரெழுத்தானவரே!

தமிழர்
உயர் வெழுத்துக்கு
ஒரே
கையெழுத்தானவரே!

கலைஞரே
காற்றோடு
உன் பெயர் இருக்கும்!

தமிழோடு
உன் புகழ் இருக்கும்!



கவிஞர்
**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



முதல்வர் தளபதி மு.க .ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் இலவச நோட்டு புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சியை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜீவா நகரில் இயங்கி வரும் நகராட்சி தொடக்க பள்ளி மாணவ – மாணவியருக்கு நோட்டு புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, வடக்கு நகர் கழக செயலாளர் நகர் மன்ற உறுப்பினர் ஜீவரத்தினம், மாவட்ட கல்வி அலுவலர் சேதுராமன், வட்டார கல்வி அலுவலர் ஜோசப், தலைமை ஆசிரியை,ரூபி சாந்தகுமாரி மற்றும் வார்டு செயலாளர் சுப்பிரமணி, நகர் மன்ற உறுப்பினர் சீனிவாசன் மற்றும் ஆசிரியர் ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. இராமச்சந்திரன்
### ஜூன் 5 (2021)



தனது இளமைக் காலத்திலேயே கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்றியவர்.

மன்னார்குடி நகரச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1989ல் மன்னார்குடி தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட அறங்காவலர் நியமனக்குழு துணைத் தலைவர் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## 34 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
25.7.1931



மறைவு :
5.6.1991

**எஸ்.மோகன்தாஸ்**

முரசொலி மாறன் குடும்பத்தினர்

எம்.அசோகன் – அ.சுமதி
சி.கண்மணி – கே.கவிதா

மற்றும் பேரக்குழந்தைகள்